

G.தேவராஜன் இசையில் 1975ல் மிகவும் புகழ் பெற்ற ஸ்வாமி ஐயப்பன் திரைப்படப்பாடல். தென்னிந்திய மொழிகள் நான்கிலும் இப்படமும் அதன் பாடல்களும் மிக மிக ப்ரபலம் ஆயின.அதில் பத்து வயதே ஆன குமாரி.அம்பிலி பாடிய மிகவும் ஆழ்ந்த பக்தியும் எளிமையும் உடைய பாடல்.தமிழில் கவியரசர் கண்ணதாசன் எழுதினார்.

தேடுகின்ற கண்களுக்குள் ஓடி வரும் ஸ்வாமி
திருவிளக்கின் ஒளியினிலே குடியிருக்கும் ஸ்வாமி
வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும் ஸ்வாமி
வஞ்சமில்லா நல்லவர்க்கு அருள் புரியும் ஸ்வாமி
ஐயப்ப ஸ்வாமி என்றும் அருள் புரி ஸ்வாமி

They du gindra kangalukkul Ode varum Swamy

Thiru viakkin oli e ne lay kudi erukkum Swamy

Vaadu gindra Yezhaigalin varumai theerkkum Swamy

vanjamellaa nallavarkku arul pureyum Swamy

Ayyapa Swamy endrum arul puri Swamy!

கண்ணனும் நீ கணபதி நீ கந்தனும் நீயே
எங்கள் காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே
அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியும் நீயே
என் மேல் அன்பு வைத்து நதி வரைக்கும் ஓடி வந்தாயே!
ஐயப்ப ஸ்வாமி என்றும் அருள் புரி ஸ்வாமி

Kannanum ne Ganapathy ne kandhanum neye

yengal kaala devan Paramashivan Vishnuvum neye

Andamellaam kaatharulum Sakthiyum neye

Yen mel anbu vaithu nadhi varaikkum odi vandaaye

Ayyapa Swamy endrum arul puri Swamy!

அன்னையும் நீ தந்தையும் நீ சத்குருவும் நீயே
நித்ய ஆதரவாய் காத்து நிற்கும் சத்தியம் நீயே
ஆதரவே இல்லாத மக்களைக் காக்க
என்றும் அன்புருவாய் எங்களுள்ளே வந்திடுவாயே!
ஐயப்ப ஸ்வாமி அருள் புரி ஸ்வாமி

Annaiyum ne thandhaiyum ne sathGuruvum neye

nithya aadharavaai kaathu nirkkum Sakthiyum neye

aadharavay ellaadha makkalai kaakka

endrum anburuvaai engalullay vandheduvaaye

Ayyapa Swamy endrum arul puri Swamy!